முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 782**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

19.11.2021, வெள்ளிக்கிழமை

1. தவராஜனே அரங்கா போற்றி
   தரணிகாக்க வந்த தேசிகா போற்றி
   அவனியில் ஆறுமுகன் என் அவதாரத்தை
   அரங்கன் நீ ஞானமாக வெளிப்படுத்தி
2. வெளிப்படுத்தி உலகோர்க்கு அழியாமை என்கின்ற
   வித்தை அருளி இந்த உலகமெங்கும்
   கலித்துன்பம் போக்கி காக்க வந்த
   கருணைவடிவான தேசிகனே
3. பெருமைபட உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
   புகலுவேன் சுப்ரமணியப்பெருமான் யானும்
   அரங்கனே உன் தர்மம் இந்த உலகை ஆளும்
   அரங்கனே உன் சன்மார்க்கம் இந்த உலகை வெல்லும்
4. வரம்பெற்று உன்வழி வருகின்ற தொண்டர்கள் மூலமாகவே
   வையகத்தை ஆறுமுகன் யான் மாற்றம்செய்வேன்
   தருகின்ற உன் தர்மத்தைக் கொண்டே உலகமெங்கும் பசிபிணி விரட்டி
   தரணியை பசுமையாக்கி மகிழ்விப்பேன்
5. மகிழ்வுற அரங்கன் தர்மம் வளரவளர
   மண்ணும் விண்ணும் இயற்கையும் அரங்கன் ஆசிக்கு தகுதிபெற்று
   தகுதி பெற்று ஐயமற கருணைவடிவாக மாறி
   அகிலத்தை பாதுகாக்கும் வண்ணம் செயலாக இயங்கக்கூடும்
6. கூடவே இந்த அற்புதத்தை குரு அரங்கன் வழி
   ஆறுமுகன் யான் நடத்துகின்றேன்
   மாறுதலை வேண்டி உலகோர் அரங்கன் வழி வரவரவே
   இந்த அற்புதம் ஞானயுகமாற்றமாக நடந்தேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–